பக்கங்கள்: நான்கு

Rigistered as a New-paper

யாழ். திருமறைக் கலா மன்றத்தின்
பிரமாண்டமான
தயாரிப்பு
பலிக்களம்
(பக்தி இசையுரை நாடகம்)
ஏப்ரல்
1, 2, 3, 4ஆம் திகதிகளில்
மாலை 6-45 மணிக்கு
மன்றக் கலையரங்கம்

# உதயன்

விலை
ரூபா
5-00

1971ஆம் ஆண்டில்
யாழ். கோட்டை மைதானத்தில்
நடைபெற்ற
"அன்பில் மலர்ந்த
அமர காவியம்"
மீண்டும்
பலிக்களம்
என்னும் பெயரில்
மேடையேறுகிறது!

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 15 ஞாயிற்றுக்கிழமை (28-03-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 121

# மணலாறில் அதிரடித்தாக்கு; 5 ராணுவத்தினர் உயிரிழப்பு

## இரு காவலரண்கள் அழிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

மணலாறு சிலோன் தியேட்டர் இராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள சிங்களக் குடியேற்றத்துக்குப் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த இராணுவக் காவலரண்கள் இரண்டின் மீது நேற்று அதிகாலை 2.45 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிவேகத் தாக்குதல் ஒன்றை நடத்தி அவற்றை அழித்தனர்.

சுமார் 5 நிமிட நேரம் நடத்தப்பட்ட இந்த அதிரடித் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அங்கிருந்து துப்பாக்கிகள், இராணுவத் தளபாடங்கள் பலவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

தாக்குதல் இடம்பெற்ற சமயம் ஏனைய இராணுவ முகாம்களில் இருந்து தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதலின் போது விரவேங்கை அருளப்பன் (மொறிஸ் வின்சன் சிறிதாஸ் — முதலாம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை) என்ற போராளி வீரச்சாவடைந்தார்.

(ஓ-5)

## இளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 28

இளாலி — பூநகரி படகுச் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறும் என நிதித்துறையின் யாழ் மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

(இ-5)

## நரசிம்மராவை அகற்ற கோரி உண்ணாவிரதம்

புதுடில்லி, மார்ச் 28

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று கோரி ஆளும் கட்சியைச் சேர்ந்த 10 பிரமுகர்கள் நேற்று உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

ஆளும் கட்சியின் தேசிய மாநாட்டில் இந்த உண்ணாவிரதம் நடைபெற்றது.

சுமார் 6 முன்னாள் அமைச்சர்கள் உட்பட இவர்கள் 10 பேரும் மாநாட்டு மண்டப வாசலுக்கு செல்லும் வழியில் உட்கார்ந்திருந்தார்கள்.

காங்கிரஸ் தலைவர் பதவியில் தொடர்ந்து இருக்க வேண்டுமா என்பது பற்றிய இரகசிய வாக்களிப்புக்கு திரு நரசிம்மராவ் இணக்கம் தெரிவிக்கும் வரை தமது எதிர்ப்பைக் கைவிடப் போவதில்லை என்று இவர்கள் தெரிவித்தனர்.

(இ)

## குவேக்கர் குழுவினர் மீண்டும் கொழும்பில்

கொழும்பு, மார்ச் 28

குவேக்கர் சமாதான அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் சிலர் மீண்டும் கொழும்பு வந்துள்ளனர். வடக்கு-கிழக்கில் நடக்கும் யுத்தத்தை நிறுத்தி, பேச்சுவார்த்தைகள் மூலம் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காணும் முயற்சியில் ஈடுபடுவதற்காகவே இங்கு வந்துள்ளனர்.

குவேக்கர் சமாதானக் குழு இலங்கையில் அமைதி நிலைநாட்டும் முயற்சியில் ஏற்கனவே ஈடுபட்டு வருகிறது. அந்த வகையில் அந்தக் குழுவைச் சேர்ந்த பிரதிநிதிகள் பல தடவைகள் கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் வந்து சென்றுள்ளனர்.

கடைசியாக சென்ற வருட இறுதியில் வந்து கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் அரசுத் தலைவர்களையும், விடுதலைப் புலிகள் தலைவர்களையும் குவேக்கர் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர்.

அதன் விளைவாக சமாதானப் பேச்சுக்கான சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஐரோப்பிய சமூக நாடுகளின் மத்தியஸ்தத்துடன், ஐரோப்பிய நாடு ஒன்றில் விடுதலைப் புலிகளும், அரச பிரதிநிதிகளும் பேசுவதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருந்தது.

அந்தத் திட்டம் குறித்து தேசியத் தலைவர் பிரபாகரனுடன் ஆலோசனை நடத்துவதற்காக யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வேளை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவும் மற்றும் ஒன்பது போராளிகளும் இந்தியக் கடற்படையால் வழிமறிக்கப்பட்டு வீரச்சாவடைந்தனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கம்உதாவவில் இந்திய ஜனாதிபதி

எதிர்வரும் ஜூன் மாதம் 23 ஆம் திகதி [illegible] நடைபெறவிருக்கும் கம் உதாவ - 93 விழாவில் பிரதம அதிதியாக இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 24 மணி நேரத்தில் மட்டும் படையினர் 12 பேர் உயிரிழப்பு

### கிழக்கிலும் நேற்று 3 ராணுவத்தினர் பலி

கொழும்பு, மார்ச் 28

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடந்த 24 மணித்தியாலங்களில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் பன்னிரண்டு ஸ்ரீலங்காப் படையினர் உயிரிழந்துள்ளனர். கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்த தகவல்களை மேற்கோள்காட்டி ஏஜென்சிச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

கிழக்குப் பகுதியில் வெள்ளிமலை என்ற இடத்தில் படையினரின் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று தாக்குதல் நடத்தியதில் படையினர் மூவர் கொல்லப்பட்டனர் என்றும் —

முல்லைத்தீவில் (மணலாறு) நேற்று படையினரின் காவலரண்கள் மீது புலிகள் நடத்திய மற்றொரு தாக்குதலில் மேலும் மூன்று படையினர் உயிரிழந்தனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

பூநகரிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஒரு கண்ணிவெடித் தாக்குதலில் டிராக்டர் ஒன்று சிக்கிச் சிதறியதில், அதில் பயணஞ் செய்த முகாம் அதிகாரியான கப்டன் ஒருவரும் மற்றும் இரு சிப்பாய்களும் கொல்லப்பட்டனர் என்றும்—

மாதகல் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் மரணமானார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மணலாறு தாக்குதலில் படையினர் ஐவர் கொல்லப்பட்டனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஓ-5-6)

## பீரங்கி முழக்கங்களால் நகரப்பகுதி அதிர்ந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 28

அரியாலை கிழக்கு, மற்றும் பூநகரி கல்முனைப் பக்கமாக நேற்றிரவு சுமார் 10 மணியளவில் தொடர்ச்சியாக பீரங்கிக் குண்டுச் சத்தங்கள் கேட்டபடி இருந்தன. இடையிடையே ஷெல் சத்தங்களும் கேட்டன.

இடைவிடாது கேட்ட பீரங்கிச் சத்தங்களினால் யாழ்ப்பாணப் பகுதிகள் எங்கும் அதிர்ந்தன.

நேற்று மாலை 5 மணி தொடக்கம் இளாலிப் பகுதியிலும் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடந்தன.

பூநகரி பகுதிகளில் உள்ள முகாம்களில் இருந்து அடிக்கடி தேடுதல் வெளிச்சம் பாய்ச்சப்பட்டது. யாழ். நகரப் பகுதியிலும் தேடுதல் வெளிச்சம் பிரகாசமாகத் தெரிந்தது.

மண்டைதீவில் இருந்தும் படையினர் நேற்றிரவு சுமார் 9-30 மணிக்குப் பின்னர் கிழக்குக் கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர். இதனால் நகரப்பகுதி அதிர்ந்தது.

சேதவிவரம் தெரியவரவில்லை.

(ஓ-5-15)

## கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

மணலாறில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| ★ ரி 56 துப்பாக்கி | — | 5 |
| ★ மகசின்கள் | — | 20 |
| ★ ரவைகள் | — | 2,110 |
| ★ பி. கே. ரவை | — | 124 |
| ★ ஜே. ஆர். கிரனேட் | — | 7 |
| ★ தொலை நோக்கி | — | 1 |
| ★ 60 மி. மீ. கிளீனிங் றொட் | — | 1 |
| ★ ஏ. கே. ஹோல்ஸர் | — | 5 |
| ★ தலைக் கவசம் | — | 2 |
| ★ சப்பாத்து | — | 6 சோடி |
| ★ டப்பிச் கண்ணி வெடி | — | 2 |
| ★ கத்தி | — | 1 |
| ★ மழைக் கவசம் | — | 1 |
| ★ இராணுவ பெல்ற் | — | 3 |

(ஓ-5)

## ஈழ விடுதலைப் போராட்டம் இந்தியா ஆதரிக்க வேண்டும்

### பாட்டாளி மக்கள் கட்சி கோரிக்கை

மதுரை, மார்ச் 28

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை ஆதரிப்பது போன்று விடுதலைப் புலிகளின் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் இந்திய மத்திய அரசு ஆதரிக்க வேண்டும்.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் நேற்று மதுரையில் செய்தியாளர் மாநாட்டில் இக் கோரிக்கையை விடுத்தார்.

செய்தியாளர் மாநாட்டில் திரு. ராமதாஸ் மேலும் கூறியதாவது:-

காங்கிரஸ், அ. தி. மு. க. மற்றும் தி.மு.க. ஆகிய கட்சிகள் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு பல்வேறு கால கட்டங்களில் பண உதவிகளைச் செய்திருக்கின்றன. ஆனால் பாட்டாளி மக்கள் கட்சி கொள்கை பூர்வமாகவே அவ் வியக்கத்தை ஆதரித்து வருகிறது.

விடுதலைப் புலிகளின் தமிழீழம் பெறுவதற்கான போராட்டத்தை எமது கட்சி ஆதரிக்கிறது.

ஆனால், விடுதலைப் புலிகள் இந்தியாவின் எந்தவித வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டாலும் பாட்டாளி மக்கள் கட்சி அவ்வியக்கத்தைக் கண்டிக்கத் தயங்காது — என்றார்.

(இ)

## அதிரடிப்படை, பொலீஸ் மட்டக்களப்பில் குவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா பொலீஸாரும், அதிரடிப் படையினரும் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குவிக்கப்பட்டுள்ள பொலீஸார் அங்கு சோதனைச் சாவடிகள் பலவற்றை அமைக்கும் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் [illegible] பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளில் பொலீஸாரும், அதிரடிப் படையினரும் தற்போது ஈடுபடுத்தப்பட்டுவருவதாகவும் —

அங்கிருந்து வாபஸ் பெறப்பட்ட இராணுவத்தினர் வடபகுதிக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் கிழக்குத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ராணுவத்தின் சூட்டுக்கு தமிழ்க் குடும்பஸ்தர் பலி

### மூதூர் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம் மார்ச் 28

மூதூர் கடற்கரைச்சேனையில் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தமிழ் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

கடற்கரைச்சேனையைச் சேர்ந்த சின்னத்தம்பி நாதன் (வயது 40) என்பவரே இச் சம்பவத்தில் கொல்லப்பட்டதாகத் அறிவிக்கப்பட்டது.

(ஓ-5)

## யாழ். ஆஸ்பத்திரித் தேவைக்கு பணம் கொடுத்து மருந்துகள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து வகைகளில் பெரும் பகுதியை கொழும்பில் வெளிச் சந்தையில் பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மருந்து வகைகளை வாங்குவதற்குத் தேவையான மேலதிக நிதியைக் கண்டு பிடிப்பதில் நிர்வாகத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பில் வெளிச்சந்தையில் மருந்து வகைகளை வாங்கி வருவதற்குரிய நிதியைத் தந்துதவுமாறு யாழ்ப்பாணத்தில் இயங்கும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கு விண்ணப்பித்துள்ளனர். இந்த விண்ணப்பம் குறித்து இணையம் தனது அங்கத்துவ நிறுவனங்களுக்குத் தெரியப்படுத்தி யாழ் ஆஸ்பத்திரிக்கு மருந்து எடுத்துவர உதவுமாறு கேட்டுள்ளது.

கொழும்பில் அரசாங்க மருந்துக் களஞ்சியத்தில் அத்தியாவசிய மருந்து வகைகள் முடிவடைந்ததாக கைவிரிக்கப்பட்டதாலேயே வெளிச் சந்தையில் பணம் கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரியப்படுத்தி உள்ளன.

(அ—162)

## விமான கடத்தல் முயற்சி தோல்வி

புதுடில்லி, மார்ச் 28

புதுடில்லியில் இருந்து சென்னை நோக்கிப் புறப்பட்ட இந்தியன் எயார்லைன்ஸ் விமானம் ஒன்றை கடத்துவதற்கு சீக்கியரான நபர் ஒருவர் மேற்கொண்ட முயற்சி நேற்று தோல்வி கண்டது.

அம்ரிட்சர் விமான நிலையத்தில் இந்த விமானம் பலவந்தமாகத் தரை இறக்கப்பட்ட பின்னர் கடத்தல்காரர் கைதுசெய்யப்பட்டார்.

இந்த விமானத்தில் இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு. பா. சிவந்தி ஆதித்தன், நடனக் கலைஞர் சுதாராணி ரகுபதி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். கே. பி. இராமச்சந்திரன் உட்பட 200க்கும் மேற்பட்டவர்கள் இருந்தனர்

(இ-5)

# ஷெல் வெடித்துச் சிதறியதில் மன்னாரில் 4 மாணவர் பலி

மன்னார் - மருதமடுவில் இராணுவத்தினரின் ஷெல் ஒன்று வெடித்துச் சிதறியதில் பாடசாலை மாணவர்கள் நால்வர் கொல்லப்பட்டனர். மேலும் 11 மாணவர்கள் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

மன்னார், மருதமடு பாடசாலைக்கு அருகில் இராணுவத்தினரால் ஏவப்பட்டு அநாதரவாகக் கிடந்த ஷெல் ஒன்றை எடுத்த சமயம் அது வெடித்ததனால் இவ் அனர்த்தம் நிகழ்ந்ததாக அறிவிக்கப்படுகிறது.

முருங்கனைச் சேர்ந்தவர்களான விஸ்வநாதன் தேவராஜா [வயது 12], புலேந்திரன் ஜெபநேசன் [வயது 10], இராசநாயகம் ஜெ[illegible], கண்டலைச் சேர்ந்த [illegible] அமலநாதன் [வயது 11] ஆகிய நான்கு பள்ளிச் சிறுவர்களே இச் சம்பவத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர்.

(ஓ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அலுவலக தேவைக்குரிய புதிய ஆங்கில தட்டச்சு இயந்திரம், மேசைகள், கதிரைகள், பெரிய போட் பலகை, சவர்காரம் இடிபண்ணும் கால் மெஷின், ரீ.வி, றேடியோ, குளிர்சாதனப் பெட்டி ஆகியன விற்பனைக்குண்டு. 41, கட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். (24943)

தருத்தி, கொம்புப்பட்டடை தில்லர் உட்பட பல பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: கா. கிருஷ்ணராஜா, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். (6077)

முதிரை மேசைகள், கதிரைகள் விற்பனைக்குண்டு. திருநாவுக்கரசு (சுன்னாகம் நூல் நிலையத்துக்கு எதிராக) பெரிய மதவடி, பூதராயர் வீதியில் முதலாவது ஒழுங்கையில் மூன்றாம் வீடு. (5860)

### தேவை

20 — 40 வயதிற்கு இடைப்பட்ட தோட்ட வேலை, கோவில் பல வேலை போன்றன செய்யக் கூடிய ஒருவர் உடன் தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும். விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். துர்க்கையம்பாள் தேவஸ்தானம், சாவகச்சேரி. (24935)

### உடன் தேவை

2000 Wattsக்கு மேற்பட்ட Automatic Voltage Stabilizer உடன்தேவை. தொடர்பு நிர்மலானந்தன், இல. 2/2, கண்டி வீதி, சுண்டிக்குளி. (ஆஸ்பத்திரி வீதி-கண்டி வீதி சந்தி) (24966)

### மணமகன் தேவை

40 வயது, இந்து, 7இல் செவ்வாய் உள்ள விவாகரத்துப்பெற்ற பெண்ணுக்கு பொருத்தமான மணமகன் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும்: இல. 509, மேற்பார் உதயன், யாழ்ப்பாணம். (24974)

### இலவச திருமண சேவை

37 வயது, திருவோணம், செவ்வாய் 4, ஜேர்மனியில் தொழில்புரிபவருக்கு மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் செய்து அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (24924)

### திருமண சேவை

29 வயது, பூசம், டாக்டருக்கும், 41 வயது, மூலம், 4இல் செவ்வாய், அதிபருக்கும் முறையே டாக்டர், B.Sc. பட்டதாரி மணமகள் தேவை. சித்திரகலா திருமண சேவை, 71, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (6076)

### சோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதவும், கைரேகை, எண்சோதிடம் பார்க்கவும், விவாகப் பொருத்தம், வீட்டுக்கு நிலையம் நிச்சயிக்கவும் நேரில் சந்திக்கலாம். காலை 8-30 — 12-30. பிற்பகல் 3-00 — 6-00. த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 364, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (24946)

### சங்கீதம்

வட இலங்கைச் சங்கீத சபையின் இரண்டாம் தரத்திற்கான பரீட்சை மற்றும் ஏழாம், எட்டாம், ஒன்பதாம் ஆண்டுகளில் தவணைப் பரீட்சைக்கான சங்கீதம் வினா-விடை புத்தகம் எங்கும் விற்பனையாகின்றது. ஆசிரியை ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்த சர்மா. (24955)

### மிருதங்கம்

மிருதங்க பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க திருத்த வேலைகள் மிக விரைவில் நல்ல முறையில் மலிவாக செய்துகொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (24937)

## கரை ஒதுங்கிய சடலம்

இளாலிப் பகுதி கடற்கரையில் கடந்த வியாழக்கிழமை ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியது.

இளைஞர் ஒருவருடையது எனக் கருதப்படும் அந்தச் சடலம் அடையாளம் காண முடியாதவாறு அழுகிய நிலையில் காணப்பட்டது.

அந்தச் சடலம் ஒதுங்கிய இடத்துக்கு அருகிலேயே மறுநாள் பகல் அடக்கம் செய்யப்பட்டது. (ஒ-117)

## மகர யாழுக்கு மவுசு!



மகர யாழுக்கு மவுசு கொடுத்த
மருத்துவ மேதை!
கம்பன் கழகத்தை
உரைகல்லாக்கிய
மகர யாழ் விருது!
இரண்டிற்கும்
பல்லாண்டு! பல்லாண்டு!
பல்லாண்டு!
மேதைக்கும் பல்லாண்டு!
கம்பன்
காதைக்கும் பல்லாண்டு!

வாழ்த்துவோர்:
வயலின் வித்துவான் -
சங்கீத பூஷணம் V.K. குமாரசாமி,
திருமதி கு. புவனசுந்தரி.

(சி-4596)

## நீரிறைக்கும் இயந்திரம் தேவை

வில்லூன்றி புனித தீர்த்தத்தை இறைத்து துப்புரவு செய்வதற்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை வாடகைக்கு விடக்கூடியவர்களிடமிருந்து அல்லது தீர்த்தக் கேணியை இறைத்துச் சுத்தப்படுத்தும் வேலையை ஒப்பந்த அடிப்படையில் முற்றாகப் பொறுப்பேற்றுச் செய்யக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விவரங்களை 03 - 04 - 1993 சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் 12 மணிக்குமிடையில் வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலில் அறிந்து கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்படிவங்கள் 06-04-1993 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

செயலாளர்,
வில்லூன்றி புனித தீர்த்த-
பரிபாலனசபை.

(24976)

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியையும்



இம்மை: 26 — 12 — 1953

மறுமை: 29 — 12 — 1992

செல்வி
### கைலாசநாயகி குணரட்ணம்
(பனை அபிவிருத்தி சபை ஆசிரியை)
மண்டைதீவு - 5

"இறந்து விட்டாய் பேச்சினிலே
கலந்து விட்டாய் நம் மூச்சினிலே"

29-12-1992 அன்று கொழும்பில் நடைபெற்ற அன்னாரது இறுதிச் சடங்கின் போது சகல வழிகளிலும் உதவி புரிந்த பனை அபிவிருத்திச் சபைத் தலைவர், மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (28-03-1993) ஞாயிறு நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

அக்கா, பிள்ளைகள்.

இல. 11, 1ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(24963)

## புனித பத்திரிசியார் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்

இளாலியில் அகால மரணமடைந்த எமது கல்லூரியின் பழைய மாணவன் செல்வன் ஞா. வில்சன் நிக்கலஸிற்கு (மருத்துவ பீட மாணவன், யாழ்ப்பாணம்) அஞ்சலிகளை செலுத்தி இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றும் முகமாக, சகல பழைய மாணவர்களையும் சங்க அலுவலகத்தின் முன்பாக இன்று (28-03-93) பிற்பகல் 4-00 மணிக்கு ஒன்று கூடும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

கௌரவ. பொதுச் செயலாளர்
59, புனித பத்திரிசியார் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். (24987)

## விழிசிட்டி, நடராச விலாச ஐ. சங்கம்
## வருடாந்தக் கூட்டம்

இடம்: இணுவில் மத்திய கல்லூரி
ஆரம்ப பிரிவுக் கட்டடம்
காலம்: 11—04—93 ஞாயிறு மு. ப. 10 மணி

அங்கத்தவர் சமுகம் தருக

செ. சிவசுப்பிரமணியம்
(5862) செயலாளர்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 23 — 06 — 1971

உதிர்வு: 28 — 03 — 1991

### வேலாயுதம் ஜெயகாந்தன்

ஆண்டு பல சென்றாலும் அழியாதுன் எண்ணங்கள்
மீண்டு வரும் பிறவியிலும் உறவாட உன்னுடன்
வேண்டுகிறோம் ஆண்டவனை - எம் அருமைக் கண்ணா!

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;
அப்பா, அம்மா, அக்கா, தம்பி,
மற்றும் உறவினர்கள்.

பன்னாலை,
தெல்லிப்பளை. (24953)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் குலசிங்கம் ராஜ்குமார்
(Union Trust and Investments Ltd. - Jaffna Branch)

மலர்வு: 09-02-1964

உதிர்வு: 28-03-1989

வையம்பீதிலுன் வாழ்க்கையென்பது
பொய்யதாமெனப் போனபின்னரும்
மெய்யதாமுன் மென்மை நினைவுகள்
மேலுமோங்கி வளர்வதென்பதே!

பப்பா, அம்மா, அத்தான், தங்கை,
தம்பி, மச்சான், உறவினர், நண்பர்கள்.

மல்லாகம் வீதி,
தெல்லிப்பளை. (6070)

## பாதிப்புற்ற பெண்களுக்கு சுய தொழில் முயற்சிகள்
### சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவும்

யாழ்ப்பாணம், மார்ச் 25

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கான சுயசார்பு தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவ உள்ளது.

அதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலை, பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றுக்கு வழங்கிவரும் மருந்து மற்றும் உபகரண உதவிகளையும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் அதிகரிக்கும்.

யாழ்ப்பாணம் வந்துள்ள ஐ.இ. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவின் இணைப்பாளர் திரு பற்றிக் வோன் புறோ, பிரதி இணைப்பாளர் திருமதி லெபி கெனெற் ஆகியோர் இத் தகவல்களைத் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளை கடந்த செவ்வாய் சந்தித்துப் பேசினர்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணீர் அஞ்சலி

இளாலியில் அகாலமரணமடைந்த
யாழ். மருத்துவபீட முதலாம் வருட மாணவன்

செல்வன் ஞா. வில்சன் நிக்கலஸ்

அவர்கட்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை
காணிக்கையாக்குகின்றோம்.

பாரம் சுமக்கின்றோம் - நீ
பாரில் இல்லையென்று
ஈரவன் நெஞ்சு
ஓரக்கடலில் வீழ்ந்தாலும்
வீரமில்லா எதிரியை இனியும்
சோரம் போக விடமாட்டோம்
கோரக் கொலை வெறியர் - உன்
நகரப்பயணம் நிறுத்தினாலும்
நரகம் அனுப்ப முடியாது
சுவர்க்கத்தின் வாசலிலே - உந்தன்
விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு
நான்கு நாட்கள் கழிந்தாலும்
நாயகன் நீ மரித்ததினால்
நாற்றிசையும் அழுகுதடா

முதலாம் வருட மாணவர்கள்.
(24988) மருத்துவ பீடம்

## கண்ணீர் அஞ்சலி



தமிழ் அன்னை மடியில்: 28 — 07 — 1971

அதிகாரப் பிடியில்: 24 — 03 — 1993

செல்வன்
### ஞா. வில்சன் நிக்கலஸ்
24-03-1993 அன்று இளாலிக் கரையினில்
அணைந்த தீபமே!

ஆம்! கதிரவன் மறைந்து இருள் சூழத் தொடங்கிய அவ்வேளை இளாலிக் கரையினிலே இருபத்தொரு மாணவர்கள் தமது பயணத்திற்கான படகு வரும் எனக் கனமான நெஞ்சுடன் காத்திருந்த அவ்வேளை:

ஆம்! வந்தது உண்மை, ஆனால் அது கடலில் வந்த படகல்ல, பதிலாக வானில் வந்த எதிரனை அந்தோ! இருபத்தொரு தலைகளும் மண்ணை முத்தமிட்டன, பாதுகாப்புத் தேடி. ஆனால் இருபது தலைகள் தான் மீண்டும் நிமிர்ந்தன.

ஆம்! விடிய மறுத்தது மறுநாள் கதிரவனும் தனது சிறகை விரிக்கத் தயங்கினான். ஆனால் அன்றைய நாளிதழ் மட்டும் ..... "இளாலிக் கரையினில் மருத்துவ பீட மாணவன் வில்சன் என்பவர்" ...... என்று அகல விரிந்து நின்றது.

தோழா!
ஒரு பசுவைத் தேடி ஓடுகின்றது அதன் கன்று
ஒரு அன்னையைத் தேடி ஓடுகின்றது அவள் பிள்ளை
இதில் நான் மட்டும் என்ன விலக்கு?
என்று தானே
அன்று நீ சொல்லிப் புறப்பட்டாய். ஆம்
உண்மை தான். ஆனால் ... நீ... ஒரு தமிழ் மகன்,
தேடிச் சென்றதும் ஒரு தமிழ்த் தாயை.
ஆனால் அந்த உரிமையையும்
பறித்தது சிங்களக் கடற்படை

செல்வன் ஞா. வில்சன் நிக்கலஸிற்கும்,
அவரது பிரிவால் கலங்கி நிற்கும் குடும்பத்திற்கும்
எமது கண்ணீர் அஞ்சலிகள்

ஒன்பதாம் அணி நண்பர்கள்,
யாழ். மருத்துவ பீடம்.

(24978)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உள்நோக்கத்துடன் அதிகாரத்தனம்

யாழ்ப்பாணத்திற்கு வர விருந்த வெளிநாட்டுச் செய்தியாளர்கள் இடைவழியில்— வவுனியாவில் வைத்து— திருப்பி அனுப்பப்பட்டுவிட்டனர். கொழும்பில் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் இங்கு வருவதற்கு அனுமதி வழங்கி இருந்தது. ஆனால் வவுனியாவில் உள்ள படை அதிகாரிகள் அனுமதி மறுத்து திருப்பி அனுப்பிவிட்டனர். குருவை மிஞ்சிய சிடர்களாக!

பாதுகாப்புக் கருதியே செய்தியாளர்களை அனுமதிக்கவில்லை என்று வழமையான காரணத்தை— சாட்டைச்— சொல்லி மகிவினர் இது விடயத்தில் நழுவிவிட முடியாது. வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் வவுனியா வந்து சேர்ந்த அன்றும் (வியாழக்கிழமையும்) சரி, அதன் பின்னர் கடந்த இரண்டு நாட்களிலும் சரி, வவுனியாவுக்கு இப்பால் வடபகுதியில் பெரிதாக இராணுவ நடவடிக்கை எதுவும் இடம்பெறவில்லை.

ஆகையால் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணம் வரவிடாமல் தடுக்கப்பட்டமை வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒரு நடவடிக்கையாகும். குருவும், சிடர்களும் சேர்ந்து உள்நோக்கத்துடன் நடத்திய வேலை இது. பத்திரிகையாளர்களை அவர்கள் வெளிநாட்டவராயினும்சரி, உள்நாட்டவராயினும் சரி தமிழ்ப் பகுதிகளுக்கு வர அனுமதித்தால்—

அரசாங்கம் தமிழர்களை எவ்வாறு கொன்று குவிக்கிறது; பொருளாதார, போக்குவரத்துத் தடைகளைப் போட்டு ஈவிரக்கமில்லாமல் சித்திரவதை செய்கிறது; அவர்களின் உரிமைகளை பறித்து வைத்துக் கொண்டு எத்துணை அடாத்தாக நடக்கிறது; எவ்வாறு நெறியில்லா யுத்தம் நடத்தி வருகிறது.

மனித நேயமோ, மனிதாபிமானமோ, அரச நெறியோ, அறநெறியோ சிறிதும் இல்லாமல் தமிழர்களை அடிமைகளாக வைத்திருக்க முயன்று கொண்டு தார்மீகமும் சீலமும் மிக்க அரசாக எவ்வாறு பொய் வேடம் போடுகிறது; பொய்ப் பிரசாரம் செய்கிறது; தமிழர்களைப் பட்டினி போட்டுக் கொண்டு எவ்வாறு கொழும்பில் உள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளரையும், ஏனைய மக்கள் தொடர்பு சாதனங்களையும், வெளிநாட்டு ராஜதந்திரிகளையும் ஏமாற்றி வருகிறது— என்பன போன்ற உண்மைகள் தெரியவந்துவிடும் என்ற பயமே அந்தக் காரணமாகும்; தடை செய்ததற்கான நோக்கமாகும்.

பத்திரிகையாளர்களை அரிலது வெளிநாட்டுப் பிரமுகர்களைத் தாம் "ஏற்பாடு செய்த விஜயத்தில்" கூட்டிக் கொண்டு வந்து தமக்குச் சாதகமான, தமது கொடுமைகளை மறைக்கும் படத்தை வெளியே காட்டுவதனை மட்டுமே அரச, மற்றும் படை அதிகாரிகள் விரும்புகிறார்கள். பத்திரிகையாளர்கள் சுயேச்சையாக வந்து பார்த்தால், அடுத்த பக்கத்தை, தமது குத்தையை— உண்மை நிலையை— வெளி உலகுக்குப் படம் பிடித்துக் காட்டிவிடுவார்கள் என்ற அச்சம் உள்ளூர இருக்கிறது.

கடந்த மாதம் பி.பி.ஸி. செய்தியாளர் யாழ்ப்பாணம் வந்ததாலேயே, தலைவர் பிரபாகரனைச் சந்தித்து அவரது நிலைப்பாட்டை உலகுக்குக் காட்ட முடிந்தது. அதனால் அரசுக்கு ஏற்பட்ட சங்கடங்கள் போல இனியும் ஏற்பட்டுவிடக் கூடாதே என்ற "அக்கறை", மறுபுறம்!

பத்திரிகையாளர்கள் வடக்கிற்குள் நுழைவதைத் தடுத்துவிட்டால், தமது பொய்யுரைகளைப் பிரசாரத்தின் மூலம் உண்மையாக்கித் தொடர்ந்தும் தமிழர்களை தமது ஆதிக்கத்தின்கீழே வைத்து மிதிக்கலாம் என்ற தப்புக்கணக்கினால் அரசு இவ்வாறெல்லாம் வெளிநாட்டுப் பத்திரிகையாளருடன் அதிகாரத்தனம் புரிய முனைந்துள்ளது!

# கல்வி மேம்பாட்டுக்கு நாம் முழுஒத்துழைப்பு அளிப்போம்

## மகாபொல வைபவத்தில் இளங்குமரன்

யாழ்ப்பாணம், மார்ச் 28

"நெருக்கடியான நிலையிலும் கல்வியின் இன்றியமையாமையை கருத்தில் கொண்டு கல்வி மேம்பாட்டுக்காக எடுக்கப்படும் எத்தகைய முயற்சிகளுக்கும் எமது இயக்கம் முழு ஒத்துழைப்பையும் வழங்கும்"

நேற்று முற்பகல் 10-30 மணியளவில் யாழ். செயலகத்தில் மிகவும் எளிமையான வைபவமாக நடந்த மகாபொல மாணவருக்கான பரிசளிப்பு நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்த தமிழீழ கல்வித்துறைப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் அங்கு பேசும்போது முன் கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நேற்றைய வைபவம் நடந்தது. மறைந்த பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் நிக்கலஸிற்கு அங்கு மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

யாழ். மாவட்டத்தில் இருந்து மகாபொல பரிசில் பெறத் தகுதிபெற்ற மாணவர்களில் சுமார் 160 பேர் நேற்றைய நிகழ்ச்சியில் தமக்குரிய சான்றிதழ்களையும், காசோலைகளையும் பெற்றுக் கொண்டனர்.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், யாழ் மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம், யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் ஆகியோர் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் செயலக அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (த-5)

## தெரிவுக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது ஏன்?

கொழும்பு, மார்ச் 28

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் தற்சமயம் கலைக்கப்பட்டுள்ளதன் காரணமாகவே, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு திட்டமிட்டபடி நேற்றுமுன்தினம் கூடவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் அடுத்த மாதம் 22ஆம் திகதி காலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட உள்ளது.

## கொழும்பில் எந்த நேரமும் எதுவும் நடக்கலாமாம்!

### பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு, மார்ச் 28

கொழும்பில் எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்பது தெரியாத சூழ்நிலை நிலவுவதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் நகரில் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளதாகவும்—

சந்தேகத்தின் பேரில் 25 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது. (த-எ)

## வாசுவின் இயக்கத்துக்கு அங்கீகாரம் இல்லை

திரு. வாசுதேவ நாணயக்கார தலைமையில் அமைக்கப்பட்ட மக்கள் விடுதலை இயக்கம் என்ற அமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா மறுத்துவிட்டார்.

திரு. வாசுதேவ நாணயக்கார இது தொடர்பாக சமர்ப்பித்த விண்ணப்பம் ஆணையாளரால் நிராகரிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏழு மாகாணசபைகளும் கலைக்கப்படுவதற்கு முன்னர் இந்த அமைப்பு பதிவு செய்யப்படவில்லை என்றும்—

அதனால் அது அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட முடியாது என்றும் தேர்தல் ஆணையாளர் கூறினார்.

சில இடதுசாரி அமைப்புகளைச் சேர்த்து நவசமசமாஜக் கட்சியின் தலைமையில் புதிய அமைப்பை திரு. நாணயக்காரா ஏற்படுத்த இருந்தார். (ஔ)

## அ.தி.மு.கவின் ஆற்றாமையே தீயாக உருவெடுத்தது!

### வாழப்பாடி கூறுகிறார்

சென்னை, மார்ச் 28

அரசியல் அரங்கில் எதிர்க்கட்சிகளுக்கு முகம்கொடுக்கத் தயங்கும் அ.தி.மு.கவின் ஆற்றாமைய 'தீ'யாக உருவெடுத்தது.

தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி முன்கண்டவாறு தெரிவித்தார்.

கோவையில் தி.மு.க. மாநாட்டுப் பந்தல் எரிக்கப்பட்ட சம்பவம் பற்றி கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (உ-எ)

### யாழ். பல்கலைக்கழக

## புறநிலை படிப்புகள் அலகின் சுகவாழ்வு விரிவுரைகள்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் சார்பில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ நிபுணர்கள் ஆகியோர் இணைந்து "சுகவாழ்வு" என்ற தலைப்பில் 20க்கு மேற்பட்ட விரிவுரைகளைத் தொடராக வழங்கவுள்ளார்கள்.

இவ் விரிவுரைகள் ஏப்ரல் 3ஆம் திகதி முதல் மே 5ஆம் திகதி வரை சனிக்கிழமைகள் தோறும் காலையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் பதிவு செய்து இவ் விரிவுரைகளில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

### மயிலிட்டி வைத்தியசாலையின்

## 45 ஊழியர்களுக்கு 3 மாதம் சம்பளம் வழங்கப்படவில்லை

மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலையில் கடமையாற்றிய 45 ஊழியர்களுக்கும் கடந்த டிசம்பர் மாதம் முதல் சம்பளம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார மகளிர் வெளிவிவகார அமைச்சு மேற்படி ஊழியர்களுக்குரிய 3 மாத சம்பள கட்டுநிதியை அனுப்பி வைக்காததே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி வைத்தியசாலையின் ஊழியர்கள் தற்போது யாழ் மாவட்டத்தில் உள்ள அரச[illegible]களில் பணிபுரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-17)

## மகாபொல பரிசில்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

நேற்று யாழ் செயலகத்தில் நடந்த மகாபொல பரிசளிப்பு வைபவத்துக்கு கலந்து கொண்டு பரிசில்களைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் நாளை திங்கள் காலை செயலகத்தில் யாழ். அரச அதிபரைச் சந்தித்து தமக்குரிய பரிசில்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## முத்திரையிடல்

நாளை 29 ஆம் திகதியும், 30 ஆம் திகதியும் மற்றும் ஏப்ரல் 1ஆம், 2ஆம் திகதிகளிலும் கோப்பாய் உதவி அரச அதிபர் பணிமனையில் காலை 8-30 மணிமுதல் பிற்பகல் 1 30 மணிவரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும் (க-162)

## இன்றைய உதைபந்தாட்டம்

ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் லீக் முறையில் நடத்தி வரும் உதைபந்தாட்டப் போட்டியின் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் இன்று மாலை சுன்னாகம் ஸ்கந்தா மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு;

★ மயிலங்காடு சிறீ முருகன் அணி எதிர் மல்லாகம் கி மு ச. அணி

★ கே கே. எஸ் யம்றோயல் அணி எதிர் அளவெட்டி விநாயகர் அணி (த-89)

## நன்கொடை

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் விளையாட்டுக் கழகத்துக்குத் தேவையான கிரிக்கெட் ஆடுகள உருளை, பயிற்சிக்கான பந்துகள், உதைபந்துகள் ஆகியவற்றை பிரிட்டிஷ் தூதரகம் நன்கொடையாக வழங்கி உள்ளது. (இ)

## சத்து நிறை உணவு எள்ளு

எள்ளில் 40 சதவீதம் முதல் 57 சதவீதம் வரை எண்ணெய் உண்டு இதில் உயிர்ச்சத்து "ஏ"க்கு முன்னோடியான கரோட்டின் நிறைய உள்ளது

100 கிராம் எள்ளில் 20 முதல் 25 கிராம் புரதமும், 1200 மில்லிகிராம் சுண்ணாம்புச் சத்தும், 9 மில்லிகிராம் இரும்புச் சத்தும் இருக்கிறது.

நாம் கால்நடைகளுக்குக் கொடுக்கும் எள்ளுப் பிண்ணாக்கில் 40 சதவீதம் முதல் 48 சதவீதம் வரை புரதம் [illegible] மனிதர் உண்ணத் தகுந்த வகையில் பதப்படுத்தினால் இது சிறந்த புரத உணவாக அமையும்.

அடுத்த முறை உங்கள் குழந்தைகளுக்கு இனிப்பு வாங்கிக் கொடுப்பதற்கு பதிலாக எள்ளுருண்டையை வாங்கிக் கொடுங்கள் அது குழந்தைகளின் பல்லையும் பாதுகாத்து. போஷாக்கையும் ஊட்டும். (இ

## இன்று நடப்பவை

மெய்கண்டதேவர் ஆதீனத்தின் சார்பில் யாழ். கலைப்புலவர் வீதித் திருவாசக மன்றத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருவாசகமணி க. மாணிக்கவாசகர் திருவாசகம் திருச்சதகம் பற்றி ஞான விளக்க விரிவுரை ஆற்றுவார். (க)

o o o

சாவகச்சேரி பாரதி படிப்பகம் மற்றும் சனசமூகநிலையத்தின் 31 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், பாலர் பாடசாலை திறப்புவிழாவும் இன்று மாலை 4 மணிக்கு படிப்பக முன்றிலில் நடைபெறும். (த)

o o o

யாழ்ப்பாணம், மார்ச் 27

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்களின் வருடாந்த சுகாதார தின விழா இன்று ஞாயிறு காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் பொ இரத்தினசபாபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-5)

o o o

குருநகர், மார்ச் 28

யாழ். திருமறைக் கலாமன்ற மாதாந்த தொடர் கருத்தரங்கில் இன்று ஞாயிறு மாலை 5 மணிக்கு பண்பாடு பற்றிய கருத்துரை யாழ். பிரதான வீதி மன்றக் கேட்போர் கூடத்தில் நடைபெறும். (இ-51)

o o o

குருநகர், மார்ச் 28

யாழ். இலக்கிய வட்டத்தின் இலக்கிய சந்திப்பு இன்று ஞாயிறு மாலை 3 மணிக்கு கொக்குவில் சம்பியன் லேனில் இலக்கிய வட்டத் தலைவர் திரு. து வைத்திலிங்கம் இல்லத்தில் நடைபெறும். (இ 51)

## விவசாயப் பயிற்சி நெறி

எதிர்வரும் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் திருநெல்வேலியில் உள்ள மாவட்ட பயிற்சி நிலையத்தில் குறுகிய கால விவசாயப் பயிற்சி நெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

விவசாயம், தையல், கைப்பணி, மனையியல் ஆகிய துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைப் பண்ணை முகாமையாளர் (பயிற்சி), மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், திருநெல்வேலி என்ற விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் என்றும் கல்வித் தகைமை, வயது எல்லை இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## நாளை

தாளையடி, மார்ச் 28

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வடமராட்சி கிழக்கு பிரதேச பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றை நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (இ-144)

o o o

தாளையடி, மார்ச் 28

வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளில் கல்வி பயின்று ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், கடந்த வருடம் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களுக்குமான பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இதனை ஏற்பாடு செய்துள்ளது (இ-144)

o o o

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றுவோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது (த-5)

## பாடசாலைகளில்

கெற்பேலி அ த க பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும் (த-ரி)

## மட்டக்களப்பில் மீண்டும் ஜனசக்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் ஜனசக்தித்திட்டத்தை அமுல் நடத்த நடவடிக்கை எடுப்பதாக, ஜனசக்தி அமைச்சின் செயலாளர் அறிவித்தார். (இ-எ)

## காரைநகர் ப. நோ. கூ. ச நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

பெப்ரவரி மாத கடைசி இரு வாரங்களுக்குரிய நிவாரணப் பொருள்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு காரைநகர் ப நோ. கூ. சங்கம் வாடிக்கையாளர்களைக் கோரி உள்ளது.

ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் மார்ச் மாத முதல் இரு வாரங்களுக்குரிய நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஆலயங்களில்

மானிப்பாய் மருதடி விநாயகர் கோவிலின் வருடாந்த திங்கட் உற்சவம் நாளை கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 நாட்கள் நடைபெறும். ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 15 ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க-100-111)

o o o

மல்லாகம் அருள்மிகு வீரபத்திரர் ஆலய மஹா சங்காபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை நடைபெறும். பகல் அன்னதானமும், இரவு திருவூஞ்சலும் இடம்பெறும். (த-89)

o o o

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் நாளை திங்கட்கிழமை இரவு 7-30 மணிக்கு "அகங்காண் பராபரமே" என்னும் பொருளில் அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு இ ஜெயராஜ் சொற்பொழிவு நிகழ்த்துவார் (த)

o o o

யாழ்ப்பாணம், மார்ச் 28

நவக்கிரி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை சங்காபிஷேகமும், தீர்த்தோற்சவமும் நடைபெறும் சங்காபிஷேகக் கிரியைகள் காலை 7 மணிக்கு ஆரம்பமாகும். (அ-15)

---

### பாதிப்புற்ற...

2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் குடாநாட்டின் தற்போதைய அவசியத் தேவைகளையும், மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறினர்

யாழ் மாவட்ட நிலையை அறிந்து கொழும்பு அலுவலகம் ஊடாக லண்டன் தலைமையகத்துக்கு அறிவித்து வருவதாக சிறுவர் நிதியப் பிரதிநிதிகள் கூறினர் (அ-162-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### தெய்வேந்திரம் சிவகாம்பிகை

சித்தன்கேணியைச் சேர்ந்த சோமசுந்தரம் தெய்வேந்திரம் அவர்களின் அன்பு மனைவி சிவகாம்பிகை (27-03-93) சனிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் சிவபதம் அடைந்த நீர்வேலி நொத்தாரிஸ் ஆறுமுகம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சிவபதம் அடைந்த ஓவசியர் சோமசுந்தரம் பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், விக்னேஸ்வரன் (கனடா), மனோகரன் (கனடா), வடிவாம்பாள் (கனடா), சாவித்திரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கிரிஜா, ரமணி (கனடா), இரகுநாதன் (கனடா), மகாமயம் ஆகியோரின் அன்பு மாமியாரும், வாமினி, துஷாரகா, அமிர்தா (யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), கோபினா, லக்ஷ்மன், நிரோஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மகேஸ்வரி, குகமூர்த்தி (நீர்வேலி), மனோன்மணி, காலஞ்சென்ற கார்த்திகேசபிள்ளை புனிதவதி, ஞானாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாம்பசிவம் (மீன்பிடித் திணைக்களம்) அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28-03-93 ஞாயிறு காலை 8 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

தகவல்:
சோமசுந்தரம் தெய்வேந்திரம்
(இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர்)
(கணவன்)

சிவன்கோவிலடி,
சித்தன்கேணி.
(6078)

### பொன்னர் செல்லப்பா

பொன்னர் செல்லப்பா காலமாகி விட்டார். இவர் பொன்னர் தங்கம்மாவின் அன்பு மகனும், பர்வதத்தின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிறு (28-3-93) காலை 11 மணியளவில் ''இராஜபவனம்'', கே. கே. எஸ். வீதி, இணுவில் கிழக்கில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

'இராஜ பவனம்',
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.
(24986)

தகவல் :
த. நாகராசா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்,
தாவடி இ. த. க. பாடசாலை)

### பொன்னையா பாக்கியம்

ஒட்டுமடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் பொன்னையாவின் அருமை மனைவி பாக்கியம் 26-03-93 வெள்ளிக்கிழமை இரவு சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் திருமதி அ. செல்லம்மா, கிருஷ்ண பிள்ளை (இளைப்பாறிய ரயில்நிலைய அதிபர்), மனோன்மணி சச்சிதானந்தன், சேனாதிராசா (எந்திரி, நீர்ப்பாசன இலாகா, முத்தையன்கட்டு), குணரத்தினம் (டோகா), ஜெயநீஸ்வரி பாலச்சந்திரன் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசலட்சுமி, காலஞ்சென்ற சச்சிதானந்தன், தேவி, உலகேஸ்வரி, பாலச்சந்திரன் (இளைப்பாறிய மாநகர சபை உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமியாரும், விக்கினேஸ்வரராசா, Dr. திருமதி இரத்தினமாலா, குமாரதேவன் (எந்திரி, திருகோணமலை), விமலேந்திரராஜா; பகிரதன், சிதரன், சாமினி (யா/கனகரெத்தினம் ம ம. வித்தியாலய ஆசிரியை), பாமினி, மஞ்சுளா, பிரேமிளா, உஷாந்தி, துஷாரா, உருத்திரநாத் ஆகியோரின் பேர்த்தியும், மோகனப்பிரியன், ஜெயவாணி ஆகியோரின் அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் 27-03-93 சனிக்கிழமை, 202, மானிப்பாய் வீதி, ஒட்டுமடத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றேன்.

202, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம்.

தகவல்:
பொ. கிருஷ்ணபிள்ளை
(மகன்)

(24989)

### திருமதி கிட்டிணர் நல்லம்மா
[குரும்பசிட்டி]

குரும்பசிட்டியைச் சேர்ந்த திருமதி கிட்டிணர் நல்லம்மா 1993 03-26 அன்று இணுவிலில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருவிளங்கம் கிட்டிணரின் அன்பு மனைவியும், சண்முகநாதன் (ஜேர்மனி), சத்தியநாதன் (நியூ அன்னை ஸ்டோர்ஸ், தருமபுரம்), பத்மாவதி, புஸ்பராணி (ஆசிரியை, சைவ மகாஜனா இணுவில்), யோகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், அரியமலர், வரலட்சுமி, யோகநாதன், இராசநாயகம் (அதிபர் தங்காலை), ஈஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரகாஷ், கதிர்தாஸ், சாருதாஸ், லாட்சிகா, பிரசுவாதன் (கனடா), நிலீபன், கஸ்தூரி, மைதிலி, அம்பிகை, சுபேதா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற துரையப்பா, சோமசுந்தரம், காலஞ்சென்ற தர்மலிங்கம், லட்சுமி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 29-03-93 காலை 10மணிக்கு இணுவிலிருந்து தாவடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
இணுவில்,
கலைனாகம்.

ஐ. ஈஸ்வரமூர்த்தி
(24985

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் தாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28 03-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

'நில்கிரி' கப்பலில் எடுத்து வரப்பட்ட மண்ணெண்ணெய் தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளினூடாக நேற்று முன்தினம் முதல் 2ஆவது தடவையாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

''இ'', ''உ'' நிவாரண அட்டைகளுக்கு லீற்றர் 15 ரூபாவுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமையும் மேற்படி சங்கக் கிளைகள் திறக்கப்பட்டு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும். (இ-168)

## மருதடியில் இலங்கை வங்கி கருமபீடம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

கடந்த வருடங்களைப் போன்று இம்முறையும் இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளையின் ஒரு விசேட கருமபீடம் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய உற்சவ காலத்தில் செயற்பட உள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 9 மணியளவில் இக் கருமபீடம் ஆலய தர்மகர்த்தா திரு. எஸ். சிவகுருநாதனால் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்படும். [இ-168]

# தர்மப் பணம் பெறுவோர் எண்ணிக்கையில் வெட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசாங்க உதவிப் பணம் பெறுவோரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. இதுவரை இந்தத் தர்மப் பணத்தை பெற்று வந்தவர்களில் இருபது சதவிதமானோருக்கு இந்த மாதம் அது நிறுத்தப்பட்டுவிட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் தர்மப் பணம் பெற்றவர்களின் எண்ணிக்கை 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

தர்மப்பணம் வழங்குவதற்குப் போதிய கட்டுநிதி சமூக சேவைப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் அதனாலேயே பலருக்கு அதனை நிறுத்த வேண்டி வந்ததாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து ''இ'' உணவு அட்டை வைத்திருப்பவர்களுக்கே இம்மாதம் தொடக்கம் தர்மப்பணம் நிறுத்தப்பட்டுள்ளது எனவும் இது ஒரு தற்காலிக ஏற்பாடே என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-17)

## பழனி, ராணிப்பேட்டை தொகுதிகளில் பாட்டாளி மக்கள் கட்சி தனித்து போட்டியிட முடிவு

பழனி நாடாளுமன்றத் தொகுதியிலும், ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதியிலும் பட்டாளி மக்கள் கட்சி தனித்துப் போட்டியிடும் என்று அக்கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் நேற்று அறிவித்தார்.

நேற்று மதுரையில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் வைத்தே டாக்டர் ராமதாஸ் இந்த அறிவிப்பை விடுத்தார்.

நாடாளுமன்றத்துக்கு இடைத்தேர்தல்கள் வருமானால் காங்கிரஸ் கட்சியுடன் பட்டாளி மக்கள் கட்சி கூட்டணி அமைத்துக்கொள்ளுமா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு—

இது குறித்து எமது கட்சியின் பொதுக்குழு தான் முடிவு செய்ய வேண்டும் என்றார் திரு. ராம்தாஸ். [ஒ]

## நட்டஈடு

கொழும்பு, மார்ச் 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட சுமார் ஆயிரத்து 800 குடும்பங்களுக்கு நட்டஈடாக 2 கோடி 90 லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இத்தொகையை நிறைசேரி' புனர்வாழ்வு அமைச்சுக்கு ஒதுக்கியுள்ளது.

## வன்னியில் வரட்சி

வன்னி மாவட்டத்தில் தற்பொழுது கடும் வரட்சி நிலவுகிறது.

கிளிநொச்சி பூநகரியில் உள்ள குளங்கள் பெரும்பாலும் வற்றும் நிலையை அடைந்துள்ளன.

இதனால் விவசாயிகளின் சிறுதானிய பயிர் செய்கை பாதிக்கப்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரியில் உள்ள எல்லைக்கால், மூளையடம்பன் ஆகிய இரண்டு பெரிய குளங்களிலும் உள்ள தண்ணீர் தற்போதைய வரட்சியினால் வற்றியுள்ளது.

குளங்களில் தண்ணீர் வற்றி வருவதால் கால்நடைகள் தண்ணீருக்கு அலைந்து திரிகின்றன. (இ-17)

# ஒரு மாதத்தில் மட்டும் 1140 பேருக்கு மலேரியா

சென்ற பெப்ரவரி மாதத்தில் மட்டும் யாழ். மாவட்டத்தில் 1140 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர் இவர்களில் 1000 பேர் சாதாரண மலேரியாவினாலும் 140 பேர் மூளை மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டனர்.

இதே காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் 168 பேர் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 161 பேர் சாதாரண மலேரியாவினாலும் 7 பேர் மூளை மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்ட மலேரியாத் தடுப்பு இயக்கத்தினர் நடத்திய ஆய்வுகளில் இருந்து இத் தகவல்கள் வெளியிடப்பட்டன. (இ-162)

## நிர்வாக சேவை பரீட்சை திகதி நீடிப்பு

இலங்கை நிர்வாகசேவைக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் திகதி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## தி.மு.க. மாநாட்டு பந்தல் எரிப்பு: நீதி விசாரணை வேண்டும் என்கிறார் வாழப்பாடி

சென்னை, மார்ச் 28

கோவை தி மு க. மாநாட்டு பந்தல் எரிப்புச் சம்பவம் தொடர்பாக நீதி விசாரணைக்கு உத்தரவிடும்படி தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி மாநில அரசாங்கத்தைத் கேட்டுள்ளார்.

உண்மை நிலையை அறிய இவ்விசாரணை அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

## யானைகளின் எண்ணிக்கை குறைந்து வருகின்றதாம்!

### அதிகாரி கவலை தெரிவிப்பு

இலங்கையில் யானைகளின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருகிறது

தீவிரவாத நடவடிக்கைகள் காரணமாக வில்பத்து, யால காட்டுப் பகுதிகளுக்கு வன விலங்குகள் அதிகாரிகள் செல்ல முடியாதுள்ளது என்றும் — அங்கெல்லாம் யானைகளுக்கு என்ன நடக்கிறது என்பதை எம்மால் அறிய முடியாதுள்ளது என்றும் வன விலங்குப் பாதுகாப்பு அதிகாரி திரு. அத்தபத்து தெரிவித்தார். [த-எ]

## நாட்டின் பல இடங்களிலும் நேற்று மகாபொல வைபவம்

### பிரேமா தலைமையிலும் நிகழ்ச்சி

கொழும்பு, மார்ச் 28

நாட்டின் பல இடங்களிலும் மாவட்ட ரீதியாக நேற்று மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவங்கள் இடம் பெற்றன.

23 மாவட்ட நிலையங்களில் 3 ஆயிரத்து 748 பட்டதாரி மாணவர்கள் நேற்று மகாபொல புலமைப் பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர் என்று இலங்கை வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஜனாதிபதி பிரேமதாச நேற்று கெப்பிட்டிக்கொல்லாவயில் வைத்து மகாபொல புலமைப் பரிசில்களை வழங்கினார் என்றும்—

ஏனைய மாவட்டங்களில் எம்பிக்களின் தலைமையில் இந்த வைபவங்கள் இடம் பெற்றன என்றும்—

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் அந்தந்தப் பகுதி அரசாங்க அதிபர்கள் தலைமையில் மகாபொல நிகழ்ச்சிகள் நடந்தன என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு வவுனியாவில் மகாபொல புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## குவேக்கர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் குவேக்கர் சமாதானக் குழுவினர் மீண்டும் இப்போது கொழும்பு வந்திருக்கிறார்கள். இவர்கள் இப்போது கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

லண்டனில் இருந்து வந்துள்ள அவர்கள் அரச தரப்பினருடன் மீண்டும் பேசுவார்கள் [illegible] படுகிறது. (அ-எ)

பலவித ராகங்களின் ஒருங்கிணைப்பு - அதில் தரமான கலைஞர்களின் பரிணமிப்பு

★ ராக மாலிகா ★

யாழ். நகரில், ராக மாலிகா இசைக்குழுவினர் வழங்கும்

இன்னிசை மழை

இடம்: புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபம்
காலம்: 21 — 04 — 1993
நேரம்: முற்பகல் 9-30 மணி
பிற்பகல் 2-30 மணி

நுழைவுச் சீட்டுகள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

ராகமாலிகாவின் நிகழ்ச்சி சிறப்புற எமது வாழ்த்துக்கள்!

சிகாமணி ரெக்ஸ்,
15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(24961)

## மரண அறிவித்தல்

### திருமதி துரையப்பா இராசம்மா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரையப்பா இராசம்மா 27-03-93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற க. துரையப்பாவின் அன்பு மனைவியும், து சகாதேவனின் அன்புத் தாயாரும், திருமதி ச. சந்திரவிலாவின் அன்பு மாமியாரும், சங்கர், சுதாகர், சாமினி, சுதர்சினி ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28-03-93) காலை 10-00 மணிக்கு மானிப்பாய் - சுதுமலை தெற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
து. சகாதேவன்
('தர்சி' பேக்கரி உரிமையாளர்)
நீர்வேலி

மூணாமலை லேன்,
சுதுமலை.
(6079)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org